சோம்பியிருந்தலைச் சிறிதும் அறியாத அண்ணல் போப், இங்கிலாந்து சேர்ந்த பின்னர் மூன்றாண்டுவரை, மாஞ்செஸ்டர் அத்தியட்ச மண்டலத்தில் நற்செய்திக் கழக அமைச்சராகப் பணியாற்றினர். அடுத்து ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழையும், தெலுங்கையும் கற்றுத் தரும் பணி அவரைத் தேடி வந்தடைந்தது. ஆயிரத்து எண் ணூற்று எண்பத்தாறும் ஆண்டில், இப்பெரியாருக்கு எம். ஏ. பட்டமளித்துச் சிறப்பிக்கும் பெருமையை அப் பல்கலைக் கழகம் பெற்றது. அந்த ஆண்டில்தான் இப்பேரறிஞர், தமிழ் மறையாம் திருக்குறளைத் தரணியுள்ளார் அனைவரும் கற்றுப் பயனுறுமாறு ஆங்கிலத்தில் அழகுற மொழி பெயர்த்து வெளியிடும் அரும் பணியை நிறைவேற்றிப் பெருமையுற்றார். அதன் முன்னுரையில் "யான் தமிழ் மொழி பயிலத் தொடங்கிய காலத்திலேயே நினைத்த இவ்வேலை பல்லாண்டுகட்குப் பின் முற்றுப்பெற்றமை கண்டு இறைவனுக்கு நன்றி சொல்கிறேன். இஃது என் நெடுங்கால உழைப்பின் பலனாக வெளியிடப்படுகிறது. வியக்கத்தக்க தமிழை ஐரோப்பியரும் தமிழரும் பயிலத் துணை செய்யும் பொருட்டுப் பல நூல்கள் செய்துள்ளேன்" என்று கூறியுள்ளார்.

'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பதை நன்குணர்ந்த போப், குறளை மொழிபெயர்த்த பின், நாலடியாரை நன் முறையில் மொழி பெயர்த்தியற்றி ஆயிரத்து, எண்ணூற்றுத் தொண்ணூற்று மூன்றில் வெளியிட்டார். வெண்பாவிற்கேற்ற பொழிப் புரையையும், கற்பதற்குதவும் இலக்கணத்தையும் இணைத்து, இந்நூலை உருவாக்கிய

திறம் வியத்தற்குரியது. அதற்கு முன்னுரை எழுதுகையில் "தமிழ் நாட்டில் எழுந்த பேரிலக்கியங்களை இவ்வாறு வெளியிடுவதால் நலன் விளையும் என நம்புகிறேன். தமிழ் நாட்டு இளைஞர்கள் ஊக்கமுடனும் திறமையுடனும் ஆங்கிலக் கல்வி கற்கின்றனர். அவர்கள், வியக்கத்தக்க தங்காது இணையற்ற தமிழ் மொழியைப் புறக்கணிப்பது நோக்கி வருந்துகிறேன்" என்று குறித்துள்ளார்.

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்னும் நன் மொழியை உணர்ந்த புலவர், ஆயிரத்துத் தொளாயிரத்தில் திருவாசகத்தை அதன் உருக்கம் குன்று வண்ணம் உயரிய முறையில் மொழி பெயர்த்து அளித்தார். அதன் முன்னுரையில் "தமிழ் மக்களுக்குப் பயன்பட வாழக் கருதுவோர் தமிழில் நினைக்கப் பழகுதல் மட்டுமன்று; தமிழில் உணர்ச்சி கொள்ளவும் பயிலுதல் வேண்டும். அழிந் தொழியும் மக்களின் மொழியை அழிந்தொழிய விட்டுவிடலாம் தமிழ் மக்களைப் பற்றி அவ்வாறு சொல்ல இயலாது தமிழ் மொழியை அழியவிடலாகாது" என்று கூறியுள்ளார்.

தமிழ்த் தாத்தா, டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் போப்பின் பணியைக் குறிப் பிட்டு, "புறநானூற்றிலிருந்தும் புறப் பொருள் வெண்பா மாலையிலிருந்தும் பல அரிய செய்யுட்களைத் தெரிந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். ஒவ் வொரு வருஷ ஆரம்பத்திலும் அத்தகைய மொழி பெயர்ப்பொன்றை வாழ்த்துடன் எனக்கு அனுப்பி வந்தார்" என்று எழுதியுள்ளார்.

டாக்டர் போப் தம் வாழ்நாளின் இறுதிப் பகுதியில், ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையை மொழி பெயர்க்கத் தொடங்கினர். ஆனல், அந்த அரிய பணி முற்றுப் பெறாத நிலையிலேயே உடல் நலிவுற்று, ஆயிரத்துத் தொளாயிரத்து எட்டாம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பதினோராம் நாள் (11—2—1908) இயற்கை எய்தினர்.

போப்பையருடைய பெருமையைக் குறிப்பிடும்போது, டாக்டர் உ. வே. சாமி நாதய்யர், "பாரிஸ் நகரத்தில் இருந்த ஜூலியன்வின்சோனது தமிழன்பையும் ஆக்ஸ்போர் டிலிருந்த போப்பினுடைய தமிழன்பையும் ஒப்பிட்டுப் பார்ப்பேன். ஒவ்வொன்றும் ஒவ் வொரு முறையில் சிறப்புடையதாக இருந்தது. இருவரிடத்தும் விடா முயற்சியும் மேற் கொண்ட காரியத்தில் ஆழ்ந்த அன்பும் இருந்தன. நம் நாட்டினரிடத்தில் இக்குணங்கள் இல்லாமையால் சோம்பலுக்காளாகி வாழ்நாளை வீணே கழிக்கின்றனர், என்று எண்ணி வருந்தினேன்." என்று வரைகின்றார்.

இவ்வாறு தமிழ் மக்களுக்கும் தமிழுக்கும் பெருந் தொண்டாற்றிய பேரறிஞர் போப், தம் கல்லறையிலும் 'தமிழ் மாணவன்' என எழுதுமாறு பணித்தாரெனில், அவர் பெருமை அளவிடும் தன்மையதோ? என்னே, அவர் தமிழ் நெஞ்சம்! இத்தகைய தமிழ்ப் பெரியாரின் பீடும் பெயரும் நின்று நிலவ, போப் கல்லூரி ஏற்பாடு செய்ய முற் படுதலில் வியப்பில்லை. அதன் முயற்சிக்கு ஒவ்வொரு தமிழனும் உதவி புரிந்து போப்பை யருக்குத் தன் நன்றியைப் புலப்படுத்த வேண்டுவது கடமையாகும்.

தலைசிறந்த தமிழ் முனிக்கோர் கலைக்கோவில்.

டி. எஸ். ஜார்ஜ் முல்லர் எம். ஏ.,
(முதல்வர், போப் கல்லூரி, சாயர்புரம்.)

போப் கல்லூரி, தமிழ் மொழிக்குப் பெருந் தொண்டாற்றிய தமிழறிஞர் டாக்டர் ஜி. யு போப் அவர்களின் நினைவாக நிறுவப்பட்டுள்ளதாகும். டாக்டர் போப் தமிழுக்குச் செய்துள்ள நற்பணிகள் எண்ணற்றவை. அவர் சாயர்புரத்தில் எட்டாண்டுகளே (1844—1852) பணியாற்றினர்; அதுவும், அவருடைய கருத்துக்கள் வளர்ச்சியடையாத இளமைப் பருவத்தில் தமிழகம் வந்து சேர்ந்த தொடக்க காலம். தஞ்சாவூர், உதகமண்டலம், பெங்களூர் போன்ற பிற ஊர்களில், அவர் பிற்காலத்தில் கல்வி வளர்ச்சிக்கு அரிய தொண்டாற்றினர். அவ்விடங்களிலெல்லாம் போப் இன்றும் மதிப்புடன் போற்றப்படுகிறார்.

ஆனால், போப்பின் பணிகள் ஆழமாக வேர்விடத் தொடங்கிய இடமான சாயர்புரமே, அவருடைய உள்ளத்தில் முதலிடம் பெறுவதாகும். சாயர்புரம் வட்டாரப் பெருமக்கள் அவரை உள்ளக் கோவிலில் வைத்து வழிபட்டு வருகின்றனர்; அவர் பணிகளை நினைத்துப் போற்றுகின்றனர். இங்கு அவர் இருந்த எட்டாண்டுகளில், சமயக் கல்லூரி ஒன்றைத் தோற்றுவித்து, அதனைக் கல்வியின் இருப்பிடமாகத் திகழச் செய்தார். அதில், தாமே ஆசிரியராயிருந்து, ஆங்கிலம், இலத்தீன் எபிரேயம், கணிதம், தத்துவம், வரலாறு முதலியவற்றைக் கற்பித்தார். 1848 ஆம் ஆண்டிலேயே ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், இந்த சமயக் கல்லூரியில் நூலகம் ஒன்று அமைப்பதற்கு நிதியுதவி அளித்தது என்றால், அதன் பெருமையை என்னென்பது !

காலப் போக்கில், போப் நிறுவிய சமயக் கல்லூரி 1880 ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட கலைக் கல்லூரியாக மலர்ந்தது. மறைத்திரு. ஷாரக் அதன் முதல் கல்லூரித் தலைவராக விளங்கினர். பிஷப் கால்டுவெல், இக்கல்லூரியை அதனுடனிருந்த உயர்நிலைப் பள்ளியோடு தூத்துக்குடி மாற்றுவது நல்லது என்று முடிவு செய்தார். அதன் பின்னர், மீண்டும் அக்கல்லூரி திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டு, பிஷப் ஹீபர் கல்லூரி எனப் பெயர்பெற்றது. கடைசியாக, தற்போது தாம்பரத்தில் புகழுடன் விளங்கும் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியுடன் இணைந்துவிட்டது.

இவ்வாறு கல்லூரியும், உயர்நிலைப் பள்ளியும் வேற்றிடம் சென்ற பின்னர் நடுத்தரப் பள்ளி மட்டுமே சாயர்புரத்தில் நடைபெற்று வந்தது. ஆயினும் ஐம்பதாண்டுகளுக்குப்பின் 1930 இல் இந்நடுத்தரப்பள்ளி, போப் நினைவு உயர்நிலைப் பள்ளியாக உயர்வு பெற்று, சுற்றியுள்ள பல ஊர் மாணவர்க்கும் பணிபுரியலாயிற்று.

இப்பள்ளியின் பழைய மாணவர் கூடி வலிவும் பொலிவும் வாய்ந்த சங்கம் ஒன்று அமைத்தனர். இந்தியா முழுவதிலும் இதற்கு ஒப்பான பழைய மாணவர் சங்கம் இல்லை

என்று கூறினால் அது மிகையாகாது. பழைய மாணவர்களின் தளராத உழைப்புக்கு, பல முன்னேற்றங்களைப் பெற்றுத் திகழும் போப் நினைவு உயர்நிலைப் பள்ளியே நல்ல தொரு சான்றாகும். 1944 இல் போப் அவர்கள் பள்ளி நிறுவி நூற்றாண்டுகள் ஆகி விட்டமையால், பழைய மாணவர் நூற்றாண்டு மண்டபம் ஒன்று கட்டத் திட்டமிட்டனர். அத்திட்டத்தின்படி கவின்மிகு கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது 1955 இல் தமிழகத் தின் முதலமைச்சர் திருமிகு. கு. காமராஜ் அவர்கள் மண்டபத்தைத் திறந்துவைத்தார்கள்.

சாயர்புரத்திலிருந்து ஒரு சில மைல் சுற்றளவிலுள்ள பண்ணைவிளை, சிறுத்தொண்டநல்லூர், ஆத்தூர், புதுக்கோட்டை முதலிய ஊர்களில் உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. இப் பள்ளிகளிலிருந்து கல்வி கற்று வெளி வரும் மாணவர் உயர் கல்வி பெறுவதற்குச் சாயர்புரத்தில் கல்லூரி ஒன்று அமைதல் இன்றியமையாத தேவை யாயிற்று. சாயர்புரம் இவ்வூர்களுக்கு நடுநாயகமாக அமைந்திருப்பதால் மாணவர், செலவு மிகுதியின்றி இங்கே கல்வி பெறலாம். போப் பழைய மாணவர் சங்கம் சாயர்புரத்தில் கல்லூரி அமைக்கும் பெரும் பொறுப்பை ஏற்றது. முன்னர் இங்கிருந்த கல்லூரியைப் புதிப்பிக்க வேண்டும் என்ற ஆர்வமும் அறிஞர் போப்பின் நினைவாக அதனை ஒரு கலைக் கோவிலாகத் திகழச் செய்ய வேண்டும் என்ற நல்லுணர்வும் பழைய மாணவர்க்கு ஆற்றலைக் கொடுத்தன.

பலருக்கு இத்திட்டம் 'பொய்யாப் பழங் கதையாய்க் கனவாய்' மனத்தில் தோன்றியது. ஆயினும் அஞ்சாமல் உழைத்தனர். சில மாதங்களுக்குள்ளாக நெல்லை பிஷப் அவர்களின் ஆசியுடனும் (பிஷப் அவர்களும் பழைய மாணவருள் ஒருவரே!) உள்ளூர் ஆலயக் குழுவினரின் ஒத்துழைப்புடனும் பழைய மாணவர் தம் கனவு நன வாயிற்று, சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் அனுமதியுடன் கல்லூரி செயல்படத் தொடங் கிற்று. தீரமிக்க இச்செயலைக் காணவும், அதில் ஒத்துழைக்கவும் வாய்ப்பு பெற்ற எனக்கு, இஃது ஒரு மறக்க முடியாத வியப்புக்குரிய அனுபவமாகும்.

1962 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாள் அருள்மிகு பிஷப் ஏ. ஜி. ஜெபராஜ் அவர்கள் ஆர்வத்துடன் குழுமியிருந்த மக்கள் முன்னிலையில் கல்லூரியைத் திறந்து வைத்தார்கள். கல்லூரி தொடங்கி மூன்று நாட்களுக்குள் பல்கலைக் கழகம் அனுமதித்திருந்த 160 இடங்களும் நிறைந்துவிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். எழுபதுக் கும் மேற்பட்ட மாணவர் இடம் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டி யதாயிற்று.

இந்தக் கல்லூரி ஏற்படுவதற்கு, நமது பெருமை மிகு பல்கலைக்கழகத் துணை வேந்தர் பத்மவிபூஷண், டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்களும், நமது மதிப்பிற் குரிய கல்வித்துறை நெறியாளர் பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேலு அவர்களும் வேண்டிய உதவிகளைக் கருணையுடன் செய்து தந்தார்கள். நண்பர்களும் நல்லோரும் நிதியளிப் பதில் காட்டிய பெருந் தன்மையை என்றும் மறக்க முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தப் பெரு முயற்சியின் ஒவ்வொரு நிலையிலும் இறைவன் காட்டிய பெருங் கருணை வியத்தற்குரியதாகும்.

போப் நினைவு உயர்நிலைப் பள்ளியை ஒட்டியுள்ள கட்டிடங்களில், இந்த ஆண்டு தற்காலிகமாகக் கல்லூரியை நடத்தி விட்டோம். இதற்கிடையில் கல்லூரிக்கும் விடுதிகளுக்கும் தேவையான கட்டிடங்களைக் கட்டுவதற்காக 40 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது.

தமிழுக்குத் தொண்டாற்றிய டாக்டர் ஜி. யு. போப் அவர்களின் நினைவாகத் தோன்றியுள்ள இக்கல்லூரி, ஒவ்வொரு தமிழரிடமும், ஒவ்வொரு தமிழ் ஆதரவாளரிடமும் உதவியை எதிர் நோக்கி நிற்கின்றது. தமிழ்ப் பேரறிஞர், அஞ்சா நெஞ்சம் கொண்ட அறிவுத் தொண்டர், தமிழ் மாணவர், தமிழன்பர், டாக்டர் போப்பின் தூய பணியை நினைவுறுத்தும் புதிய கட்டிடம் விரைவில் முடிந்து தலைதூக்கி நிற்குமாறு செய்யவேண்டிய பொறுப்பு தமிழ்ப் பெருமக்களையே சாரும் !

நாலடியாரைப் படிக்கும்போது பல அரிய உண்மைகள் வெளிப்படுகின்றன. தமிழ் மக்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்னும் ஊக்கமுள்ளவர்கள்; நன்னெறி பற்றி யொழுக வேண்டுமென்னும் விருப்பமுள்ளவர்கள்; தன்னலமற்ற உண்மையான அன்புள்ளவர்கள்; உயர்ந்த நோக்கமுள்ளவர்கள். ஒழுக்க நெறி காட்டும் நூல்களை யாத்தலையே தமிழர்கள் இன்பப் பொழுது போக்காகக் கொண்டுள்ளார்கள். இத்தகைய மக்களுக்கு நற்காலம் தோன்று மென்று நான் நம்புகிறேன். இந்திய மக்களுள் முக்கியமானவர்கள் தமிழர்களே. திருக்குறளும் நாலடியாரும் அவர்கட்கு இம்முதன்மைப் பேற்றை நல்கி விட்டன.

— டாக்டர் ஜி. யு. போப்.

தமிழ் உள்ளம்.

மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர் உ. வே. சாமிநாதையர்

மேல் நாட்டில் எனக்கு நண்பரானவர்களில் ரெவரெண்ட் ஜி. யூ. போப் ஒருவர். அவர் பல காலம் தமிழ் நாட்டில் இருந்தவர். தமிழில் சிறுவர்களுக்குப் பயன் படும் வண்ணம் சிற்றிலக்கணம் ஒன்று எழுதியிருக்கிறார். 'போப்பையர் இலக்கணம்' என்ற பெயரோடு தமிழ் நாட்டில் அது வழங்கியது. திருவாசகத்தையும் நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அவர் வெளியிட்டிருக்கிறார். ஆக்ஸ்போர்டு யூனிவர் சிடியில் தமிழ்ப் பேராசிரியராக அவர் இருந்து வந்தார்.

ஒரு சமயம் பூண்டி அரங்கநாத முதலியாரிடம் பேசிக்கொண்டிருந்த போது போப்பினுடைய பிரஸ்தாவம் வந்தது. அப்போது முதலியார், "அவர் பதிப்பித்த நாலடியார் மிகவும் நன்றாக இருக்கிறது. மிகவும் உழைத்துப் பல குறிப்புகளை எழுதி யிருக்கிறார். தங்கள் சீவகசிந்தாமணிப் பதிப்பைப் பற்றியும் அதில் பாராட்டி எழுதி யிருக்கிறார்" என்று சொல்லித் தம்மிடமிருந்த பிரதியைக் கொடுத்தார்.

பிறகு புறநானூறு வெளியான பின் அதில் ஒரு பிரதி அவருக்கு அனுப்பினேன். அரங்கநாத முதலியார் இல்லாத காலம் அது. சில மாதங்கள் வரையில் போப்பிடமிருந்து கடிதம் வரவில்லை. புத்தகம் அவரிடம் போய்ச் சேர்ந்ததோ இல்லையோ என்ற சந்தேகத் தோடு நான் இருந்தேன். மே மாதம் அவரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது. ஆங்கிலத்தில் எழுதப்பட்டது அது.

"இந்தியன் இன்ஸ்டிடியூட்"
26—4—1895

"...... தங்கள் புறநானூற்றைப் பற்றி நான் முன்பே எழுதியிருக்க வேண்டும். தாங்கள் சிறப்பாகப் பதிப்பித்த சீவகசிந்தாமணிப் புத்தகம் என்னிடம் இருக்கிறது. அதை அடிக்கடி உபயோகிப்பதுண்டு. என் நாலடியார்ப் பதிப்பில் முகவுரை 41 ஆம் பக்கத்தில் அதைப் பற்றிக் குறித்திருக்கிறேன். தாங்கள் இன்னும் ஏதேனும் பதிப்பித்தி ருக்கிறீர்களா? தங்கள் பதிப்பு நூல்களைப் பற்றி ராயல் ஏஷியாடிக் சொசைடிக்கு ஒரு கட்டுரை எழுதியனுப்ப உத்தேசித்திருக்கிறேன். புறநானூற்றை இன்னும் தெளிவு படுத்த முடியாதா? எனக்குத் தமிழ் தெரியுமென்று நான் எண்ணிக்கொண்டிருந்தாலும் எனக்கு அதில் பல பகுதிகள் விளங்கவில்லை. ஆதலால் இன்னும் தெளிவும் சுலபமுமான நடையில் உரை வேண்டும். பண்டிதரல்லாத என் போலியரிடம் கருணை கொள்ளுங்கள்.

" சிந்தாமணி பெரும்பாலும் சுலபமாகவே இருக்கிறது. அருமையும் பெருமையு முள்ள தமிழின் பொருட்டுத் தொல்காப்பியத்திற்கு ஆராய்ச்சித் திறனமைந்த பதிப்பு ஒன்று வேண்டும். ... ... புராணக் கதைகளை விலக்கி விட்டு முச்சங்க வரலாற்றைத் தக்க ஆதாரங்களைக் கொண்டு எழுத வேண்டும். ... ... புறநானூற்றை எவ்வாறு படித்துப் பயன்படுத்தலாமென்பதையேனும் தெரிவியுங்கள். "

அவர் முதல் முறையாக எழுதிய இக்கடிதத்தால், அவருக்கிருந்த தமிழன்பை ஒருவாறு அளந்தறிய முடிந்தது. தமிழ் நூல்களை நல்ல முறையில் நல்ல உருவத்தில் பதிப்பிக்க வேண்டுமென்ற கருத்துடைய எனக்கு அவர் எழுதியனவெல்லாம் மிகவும் பொருத்தமாகத் தோன்றின.

அடுத்தபடி புறப்பொருள் வெண்பாமாலைப் பிரதி ஒன்றை அவருக்கு அனுப் பினேன். அதைப் பெற்றவுடனே பின்வரும் கடிதத்தை எழுதியனுப்பினர்.

" பேலியல் காலேஜ் "
ஆக்ஸ்போர்டு, 21—10—1895.

" ... ... தாங்களனுப்பிய புறப் பொருள் வெண்பா மாலைக்காக நன்றி பாராட்டு கிறேன். அதன் பிரதி ஒன்று எங்கள் தமிழ்ப் புத்தகசாலையில் இருக்கிறது. அதைப் படித்து முடிக்க முயன்றேன்.

நானும் எவ்வளவோ திட்டம் போடுகிறேன்; ஆனல் நீங்கள் இளைஞர்; நான் கிழவன் !

'ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.'

நான் மிகவும் அசௌக்கியமாக இருந்தேன். ஆயினும் இன்னும் ஏதேனும் செய்யலா மென்று நம்பியிருக்கிறேன். ... ... உங்கள் பதிப்பு, திருத்தமாகவும் பூர்ண மாகவும் இருக்கிறது. பழந் தமிழ் நூல்களெல்லாம் புதுத் தமிழர்களுக்கு விளங்கும்படி செய்ய வேண்டும். அதற்கு வழி செய்யுங்கள் ... ... "

இக்கடிதத்தில் திருக்குறட் செய்யுளைத் தமிழிலே எழுதியிருந்தார். அவர் எழுத்துக்களிலே நடுக்கமும் வார்த்தைகளிலே தேக அசௌக்கியத்தைக் காட்டும் குறிப்பும் இருந்தன. 'ஒருபொழுதும் வாழ்வ தறியார்' என்ற அருமைத் திருக்குறளை அவர் எழுதுகையில் அவரது மன நிலை எப்படி இருந்திருக்குமென்று யோசித்துப் பார்த்தேன். எவ்வளவோ காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற ஆசையோடு உழைத்து வரும்போது இடையிலே வாழ்க்கை முடிந்து விட்டால் என் செய்வதென்ற பயம் அவர் நெஞ்சில் இருப்பதை அக்குறள் வெளிப்படுத்தியது. அவர் இன்னும் பல வருஷங்கள் வாழ வேண்டுமென்று வாழ்த்தினேன்.

நல்ல வேளையாக அவரது தேக அசௌக்கியம் மாறியது. முதுமைத் தளர்ச்சி யிருந்தாலும் தமிழாசை அவர் உடம்பில் ஒரு புதிய முறுக்கை ஏற்றியிருக்கவேண்டும். 1896-ஆம் வருஷ ஆரம்பத்தில் அவர் மீட்டும் எனக்குக் கடிதம் எழுதினர்.

3—1—1896.

" ... ... நான் நெடுங்காலம் கடிதம் எழுதாமல் தாமதம் செய்து விட்டேன், மன்னிக்கவேண்டும். தங்கள் அற்புதமான பதிப்புகளாகிய புறநானூறு, புறப்பொருள் வெண்பா மாலை என்னும் இரண்டையும் எளிதில் படித்து இன்புற்று வருகிறேன். அவ்விரண்டும் ஒன்றையொன்று அழகாக விளக்குகின்றன.

பாரி, அவன் மகளிர், கபிலர், கோப்பெருஞ் சோழன், பிசிராந்தையார், பொத்தியார் முதலியவர்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறேன். இன்னும் கர்ண பரம்பரைச் செய்திகள் வேண்டும். 115 முதல் 120 வரையிலுள்ள பாடல்கள் உள்ளங்கவர்வன ... ... தங்களுக்கு நாலடியாரின் பிரதி ஒன்று அனுப்பச் சொன்னேன். ஆக்ஸ்போர்டிலிருந்து கிடைத்ததா ? ... புது வருஷ வாழ்த்துக் கூறுகிறேன் "

அவர் அனுப்பச் செய்த நாலடியார் எனக்குக் கிடைத்தது. அவர் எவ்வளவு ஊக்கத்தோடும் ஆவலோடும் தமிழ் நூல்களை ஆழ்ந்து படிப்பவரென்பதை இக்கடிதத்திலிருந்து உணர்ந்து கொண்டேன். எந்த விஷயத்தையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும். தெரிந்ததைப் பிறருக்கு விளங்கும்படி வெளியிட வேண்டுமென்ற அவர் கொள்கை எனக்கு மிகவும் உவப்பாக இருக்கிறது.

பாரிஸ் நகரத்தில் இருந்த ஜூலியன் வின்சோனது தமிழன்பையும் ஆக்ஸ்போர்டிலிருந்த போப்பினுடைய தமிழன்பையும் ஒப்பிட்டுப் பார்ப்பேன். ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையில் சிறப்புடையதாக இருந்தது. இருவரிடத்தும் விடாமுயற்சியும் மேற்கொண்ட காரியத்தில் ஆழ்ந்த அன்பும் இருந்தன. நம் நாட்டினரிடத்தில் இக்குணங்கள் இல்லாமையால் சோம்பலுக்காளாகி வாழ்நாளை வீணே கழிக்கின்றனரென்றெண்ணி வருந்தினேன்.

போப் துரை மேலும் மேலும் பல கடிதங்கள் எழுதினர். புறநானூற்றிலிருந்தும் புறப்பொருள் வெண்பா மாலையிலிருந்தும் பல அரிய செய்யுட்களைத் தெரிந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் அத்தகைய மொழிபெயர்ப்பொன்றை வாழ்த்துடன் எனக்கு அனுப்பி வந்தார்.

இத்தகைய உண்மை உழைப்பாளிகளுடைய நட்பினால் தமிழ்ப்பணியில் என் மனம் ஊற்றமடையலாயிற்று. மணிமேகலை ஆராய்ச்சி நடைபெற்று வந்தது.

[டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் டாக்டர் போப் அவர்களைப் பற்றி " என் சரித்திரம் " என்னும் நூலில் எழுதியுள்ள இப்பகுதியை இங்கு வெளியிட அனுமதி அளித்த உ. வே. சா. அவர்களின் பெயரரான உயர்திரு. க. சுப்பிரமணியம் அவர்களுக்கு எங்கள் உள்ளம் கனிந்த நன்றி உரியதாகும். — ஆசிரியர் குழு.]

டாக்டர் போப் அவர்களும் தமிழும்

பேராசிரியர்: அ. மு. பரமசிவானந்தம் *எம். ஏ., எம். லிட்.*
(பச்சையப்பன் கல்லூரி, சென்னை.)

இறைவனுடைய மெய்த்தொண்டர் பலர் காலந்தோறும் தோன்றி, மக்கள் நன்னெறியில் வாழ வழிகாட்டிச் சென்றுள்ளனர். காலம் அவர்களை வென்று விட்டது போன்று தோன்றினும், உண்மையில் அவர்களே காலத்தை வென்று, உலகில் என்றென்றும் தெய்வநெறி வளர வழிகாட்டிக் கொண்டிருக்கின்றனர். அத்தகைய நல்ல அறநெறியாளருள் அறிஞர் போப் அவர்களும் ஒருவர்.

பிறருக்காக வாழ்ந்து, பிறர் வாழத் தான் வருந்தி, இறுதியில் பிறருக்காகவே சிலுவை ஏறி அறம் புரந்த அண்ணல் ஏசுவின் சமயநெறியைத் தமிழ் நாட்டில் பரப்பிய நல்லன்பர் பலர். அவருள் மிகச் சிலரே தம்மை மறந்து, தம் நாட்டையும் நலத்தையும் மறந்து, வாழ்வையும் வளத்தையும் மறந்து, தம்மையே தமிழராக்கிக் கொண்டு தமிழரோடு தமிழராக ஒன்றிச் சமயப்பணியில் ஈடுபட்டனர். அவருள் தலையாயவர் டாக்டர் போப் அவர்கள்.

மேலை நாட்டிலிருந்து சமயம் பரப்பவந்த வித்தகராய அவர், தமிழ் நாட்டின் தென் கோடியாகிய நெல்லை நாட்டைத் தம் பணிக்கு ஏற்ற இடமாகக் கொண்டார். 'நோயாளிக்கு மருத்துவன்' என்ற இயேசுவின் மொழிக்கேற்ப, வாடும் மக்களிடம் தாமே சென்று வாட்டம் தீர்த்தார் போப் அவர்கள். தமிழ் நாட்டுக்கு வந்து, தமிழில் வல்லவராகி, தமிழ்ப் புலவரானதோடு அமையாது, தமிழ் உள்ளம் பெற்றுத் தமிழராய்த் தமிழர் தம் நடைஉடைகளை ஏற்றதோடு, போப்பையர் என்ற பெயரையும் பெற்று ஒரு சிறந்த 'தமிழ் முனி' யாகவே விளங்கினர். திருக்குறள், நாலடியார், திருவாசகம் போன்ற தமிழின் தலையாய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவர் உள்ளங்கொள்ளைகொண்ட இந்நூல்களைப் பற்றி அவர் குறிப்பிடும்போது, தமிழர் பற்றியும் தமிழ் நாட்டைப் பற்றியும் எண்ணி எண்ணி வியக்கின்றார். அவர் தம் எழுத்துக்களில் அவர் உள்ளம் நிழலாடு கின்றது. ஒரு சில காணின் அவர்தமிழரிடத்தும் தமிழ் மொழியிடத்தும் கொண்ட பெரு மதிப்பு நன்கு விளங்கும். மற்றும், அவர் அந்நூல்களை எத்துணை ஆழமாகப் பயின்று பயன் கண்டு, 'தாம் பெற்ற இன்பம் பிறரும் பெறுக' என மொழிபெயர்த்துத் தந்துள் ளார் என்பதும் நன்கு புலனாகும்.

கிறிஸ்தவ சமயத்தவர்களுக்கு அக்காலத்தில் திருமயிலை ஒரு முக்கிய இடமாக இருந்தது. சாந்தோம் கடற்கரையில் அண்ணாந்தோங்கித் தண்ணார் தெய்வநெறி விளக் கிக் கொண்டிருக்கும் பெருங்கோயில் இன்றும் அவர்தம் மனம் ஈர்ந்து நலம் புரக்கும் நல்லிடமாகத் தானே விளங்குகின்றது! இந்த சமய நலம்புரக்கும் நல்லிடத்தை நினைக்கும்

போது, அதே திருமயிலையில் தோன்றி இரண்டாயிரமாண்டுகளுக்கு முன் இன்பத்தமிழில் என்றும் இறவாத திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரையும் அவர் நினைக்கவேண்டியதாயிற்று. நினைத்த போப் ஐயர் அவர்கள், அவ்வுண்மையைத் தெற்றெனக் காட்டியும் விளக்கி விட்டார். அவர் எழுத்தே அதற்குச் சான்று பகரும்.

The East and the West have influenced one another in a very real and not yet thoroughly understood way from their earlier times. It is undoubtedly a noteworthy fact that from this Mayilapur on which the eyes of Christendom has ever rested as the one sacred spot in India of Apostolic labour, comes the one Oriental Book, much of whose teaching is an echo of the 'Sermon on the Mount' (Introduction to Kural.)

தமிழை அனைவரும் பயில வேண்டும் என்பது பற்றியும் பயின்றோர் பெறும் பயன் பற்றியும் அவர் எண்ணிப் பார்த்திருக்கிறார். தமிழ் நாட்டில் பிற பணிகளுக்காக வருகின்றவர்கள், தம்மை மறந்து தமிழராகித் தமிழ் நலத்தில் தம் நலத்தைப் புதைத்து வாழ்வார்களாயின் அவர்கள் பெறும் இன்பம் பெரிது என்பதைப் போப் ஐயர் நன்கு உணர்ந்திருந்தார். உதட்டால் மட்டுமன்றி, உள்ளத்தால் — உற்ற நினைவால் — உற்ற உணர்வால் தமிழை அறிந்தால், அதனால் பெறும் பயன் பெரிது என்பதை அவர் உணர்ந்து, ஒரு முறையல்லாது பல முறை — தமிழ் நாட்டில் மட்டுமன்றி அவர் நாட்டிலும் எடுத்துக்காட்டியுள்ளார். அவை பற்றிப் போப் ஐயர் கூறியவற்றைப் படிக்கும் போது நம்மை நாம் மறக்கும் நிலையே உண்டாகிறது. தமிழை இனிய தமிழாக — இன்பத் தமிழாக — நலம் காக்கும் தமிழாக — நல்ல தமிழாகக் கண்ட அவர், அந்த இன்பத்தை உலகுக்கு உணர்த்தும் திறன் எண்ணி எண்ணி வியக்கத்தக்கதாகும். இதோ ஓரிரு சான்றுகள்:—

(i) "We need to understand one another and love one another if we are to be of any mutual benefit. He who knows and loves 'sweet' Tamil may come to know and love those to whom it is so dear and thus to be known and loved by them." (Introduction to Naladiar)

(ii) "For many years I have not ceased to say — there in India, and here in Oxford — to successive classes of students 'you must learn not only to think in Tamii, but also feel in Tamil, if you are to be intelligible and useful among the Tamil people." (Preface to Tiruvachakam)

இத்தகைய நிலையில் தம்மை மறந்த தெய்வப் பணியில் போப் ஐயர் அவர்களையும் அவர் போன்ற நல்லவர்களையும் ஆழ்த்திய திருக்குறள், நாலடி, திருவாசகம் போன்ற நூல்களைப் பெற்றிருக்கும் நாம் பெருமைக்கு உரியவர்களேயாவோம். எனினும், அவர்கள் அந்த நூல்களை ஆழ்ந்து படித்தமை போன்று நாமெல்லாம் படிக்கவில்லையே என்பதை நினைக்கும் போது இரங்கத்தக்க வேதனைதான் உள்ளத்து உண்டாகின்றது. "எழுத்தெண்ணிப் படித்தல்" என்று ஆழ்ந்த படிப்பினைச் சொல்லுவர் அறிஞர். வெறும்

எழுத்துக்களின் எண்ணிக்கையை மட்டுமன்றி, ஒவ்வொரு எழுத்தும் உணர்த்தும் பொருளையும் உள்ளத்தால் எண்ணிப் படித்தலேயே அத்தொடர் விளக்கும் என்பது ஆராயின் நன்கு விளங்கும். குறளை எண்ணிப் பயின்ற போப் ஐயர் அவர்கள், அக்குறள், காலமென்னும் கடும்புனலை நீந்திப் பீடு நடையிட்டுப் பேருலகில் என்றென்றும் வாழ் வாருக்குப் புதுப் புதுப் பொருள்களை விளக்கிக் கொண்டே வரும் திறனை எண்ணிப் போற்றுகின்றார். வள்ளுவர் காலத்தவர் உணர்ந்து ஓர்ந்து அறிவதினும் நாம் அதிகம் உணர்கின்றோம் என்றும், இன்று நமக்குக் குறள் உணர்த்தும் நல் உணர்வு நெறிகள் பல என்றும் அவர் காட்டுகின்றார்.

" No doubt many of the couplets in this remarkable work sav more to us than they did to those for whom they were written. "

(Introduction to Kural.)

போப் ஐயர் அவர்கள் எழுத்தையும் சொல்லையும் எண்ணித் திருக்குறளை ஆராய்ந்தார் என்பதற்கும் சான்றுகள் பலவுள. இன்று நாம் 'சொல்லடைவு' போன்ற நூல்கள் வரக் காண்கிறோம். எனினும், இன்றும் வள்ளுவரைப் பற்றி வான் முட்டப் பேசும் நம்மில் பலர் அவ்வாறு சொல்லையும் எழுத்தையும் ஆராய்வது கிடையாது. ஆனால், அக்காலத்தில் போப் ஐயர் அவர்கள் தாமே முயன்று அரிதின் உணர்ந்து வள்ளுவர் சொல்லையும் பொருளையும் ஆராய்ந்த திறனை அவர் எழுத்தின் வழியே காணல் சிறந்ததாகும்.

" The poet uses தொடி nine times as equivalent to 'lady' but never uses the same epithet twice. So with 'இழை' There is a studied variety of epithets throughout. " (Preface to Kural.)

இத்தகைய வகையில் ஆராய்ந்த வள்ளுவர் குறளை வையகமெல்லாம் போற்று மாறு தாம் மொழி பெயர்க்க ஏற்றுக் கொண்டமையை எண்ணி அவர் எழுதும் எழுத்தும் ஈண்டு நாம் நினைக்கற்பாலதாகும். இதோ அவர் எழுத்து:—

" It is primarily intented to make classical Tamil easier to English Students, while to native students it may afford means for a more comprehensive and fruitful study to their greatest classical author, who has sung of so many topics — touching all things with poetic grace. "

(Preface to Kural)

இவ்வாறு வள்ளுவரைப் பலவகையில் எண்ணி எண்ணி உள்ளமுருகிப் போற்றிய ஆசிரியர் போப் தம்மை மறந்து தமிழரானர் தமிழ்த் தொண்டு புரிந்தார். புரியாத பிற நாட்டவர்க்கு இந்நூல்களை மொழிபெயர்த்ததோடு அவர் பணி நின்றுவிட வில்லை. நம் நாட்டுத் தமிழ்க் குழந்தைகளுக்கு — எழுத்தறியா இளங்குழந்தைகளுக்கு, எளிதில் விளங்கும் வண்ணம் தமிழ் இலக்கணம் எழுதிக் கொடுத்த பெருமை அவருடைய

தாகும். ‘போப் ஐயர் தமிழ் இலக்கணம்’ சென்ற தலைமுறையில் பள்ளிக்குச் சென்ற எல்லாத் தமிழ் நாட்டுப் பிள்ளைகள் கையிலும் அணியாக விளங்கிற்று என்பதை யாரே மறுக்கவல்லார்? ஆம்! இன்றும் அவர் உணர்த்திய தமிழின் இனிமையை — வள்ளுவர் வாய்மையை — நாலடியின் நலத்தை — திருவாசகச் செம்மையை உணர்ந்து தமிழ் மக்கள் வாழ்வார்களாயின், அவர்தம் வாழ்வும் வளமும் வற்றாது ஓங்கும் என்பது உண்மை. ஆனால், உணர்வார் மிகக் குறைவாகவே உள்ளனர். தமிழையும் தமிழ் நாட்டையும் உள்ளத்தால் போற்றிய நல்லவரை நினைப்பவரும் நாட்டில் அருகி வருகின்ற இந்த நாளில் போப்பையர் வாழ்ந்து புனிதத் தொண்டாற்றிய சாயர்புரத்திலே அவர் தம் பெயராலேயே கல்லூரி நிறுவி அவர் புகழ் பரப்பும் அதே பணியில் நாட்டுக் கல்வியையும் வளர்க்கும் நல்லவர் தம் தொண்டு சிறந்த ஒன்று அல்லவா? போப் ஐயரின் திருப் பெயரால் அமைந்த கல்லூரி, அவரைப் போன்றே உள்ளத்தால் மக்கட் பணியும், கடவுட் பணியும், கல்விப்பணியும், கலைப்பணியும், தமிழ்ப்பணியும், தாய் நாட்டுப்பணியும் செய்து தழைத்தோங்குமாக!

இறுதியாக, வள்ளுவரைப் பற்றிப் பலப் பல வகையில் பாராட்டிய போப் ஐயர் அவர்கள், மேலும் வழிவகை காணாராய், மற்றோர் அறவாணரைப் பற்றி வேறோர் அறிஞர் கூறிய சொற்களையே நம் முன் வைத்துத் தம் முன்னுரையை முடிப்பதை உங்கள் முன் வைக்கின்றேன்:

“Especially of Tiruvalluvar it may be said as Archbishop Trench says of S. Augustine (S. Augustine as an interpreter of Scripture P. 154) ‘He abounds in short and memorable, and if I might so call them epigrammatic sayings, concentrating with a forceful brevity the whole truth which he desires to impart into some single phrase, forging it into polished shaft, at once pointed to pierce and barbed that it shall not lightly drop from the mind and memory” (Introduction to Kural.)

கன்னித் தமிழை வளர்க்கக் கடவுளால் படைக்கப்பட்ட செஞ் ஞாயிறுகள் சில. அச்சிலவற்றுள் ஒன்று, டாக்டர் ஜி. யு. போப் ஐயர் என்று சொல்லலாம். போப் ஐயர் வாழ்க! அவர் தம் தொண்டு வெல்க!

— தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

கோயில் கொண்டார்.

பேராசிரியர்: லூ. ஜான் அம்மையார், *எம். ஏ.,*
(சாராள் தக்கர் கல்லூரி, பாளையங்கோட்டை.)

காலையிள ஞாயிறு தன் மென்கதிர்களைப் பரப்பி உலகினைப் பொன்மயமாக்க இளங்காற்று தண்மையான நீர்ப்பரப்பை அசைக்க, பெருங் குளமொன்றில் நூற்றுக் கணக்கான தாமரை மலர்கள் மலர்கின்றன. ஆனல், அவையனைத்தும் இறைவனின் கோயிலில் இடம் பெறுவதில்லை. சில அச்சிறப்பை அடைகின்றன; பல அதைப் பெருது அழிந்தொழிகின்றன. மக்களினமும் அவ்வாறே. பல நூற்ருண்டுகளாகப் பிற நாட்டி னின்று பலர் தமிழ் நாட்டிற்கு வந்தனர்; வருகின்றனர். ஆனல் அனைவரும் தமிழர்களின் உள்ளத்தில் இடம் பெற்ருரல்லர்; பெற்றவர் சிலரேயாவர். அவ்வாறு பெற்றவர், தம் மயக்குந் தோற்றத்தாலோ, இனிக்குஞ் சொல்லாலோ பெற்ருரல்லர்; உழைப்பின் உயர்வால் பெற்ருர்.

இத்தகையவருள் சிறப்பாகக் கருதப்படுகின்ற பேற்றைப் போப்பையர் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட ஜார்ஜ் யூக்ளோ போப் என்பவர் பெற்ருர். அவர் அயராது தொண்டாற்றினமையால் சாயர்புரம் மக்களுடைய உள்ளத்தில் இடம் பெற்ருர்; சமயக் கருத்துக்களை வாரி வழங்கியதால் தமிழகக் கிறிஸ்தவர்கள் உள்ளத்தில் இடம் பெற்ருர். 'திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துதவியதால், தனியடியார் அறுபத்து மூவருடன் ஜி. யு. போப்பையும் சேர்த்து அறுபத்து நால்வர் எனலாம்' என்று அறிஞர் ஒருவர் கூறக் கூடிய சிறப்பை இந்து மக்களிடம் அடைந்தார். மேல் நாட்டாருக்குத் தமிழகத்தின் கலைச் செல்வத்தை எடுத்துக் காட்டிய சிறப்பால், தமிழக நீதியின் நீர்மையை உலகிற்கு உணர்த்தியதால், தமிழ்ப்பணியே உயிர்ப்பணியாகக் கொண்டு வாழ்ந்ததால், தமிழகத்திலுள்ள தமிழர் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இடம் பெறுகின்ருர்.

இத்தகைய சிறப்புடைய போப்பையரவர்களைப் பற்றி எண்ணுங்கால்,

" சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றித ழலரி னிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை
உரையும் பாட்டு முடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப வென்பதம் செய்வினை முடித்து "

என்னும் பாட்டு நினைவிற்கு வருகிறது. 'உரையும் பாட்டும் உடையோர் சிலரே' என்று கூறுகிறது பாட்டு. இவ்வடிகள் ஒரு சிலரே பிறரால் புகழப்படுதற்கும், அறிஞரால் பாடப்படுதற்கும் உரியர் எனக் கூறுவது உணரத்தக்கது.

தம்மைத் தமிழ் மாணவர் என்று அழைக்க விரும்பிய போப்பையரைத் தமிழ் அறிஞர் உலகம் புகழ்கின்றது; அவர் தமிழுக்குச் செய்த தொண்டைக் கண்டு பாராட்டு கிறது. சரவணப்பிள்ளை என்ற தமிழ்ப் புலவர் ஒரு பாத்தொடுத்துச் சூட்டி மகிழ்கின்றார் :

"தெய்வத் தமிழ்மறைச் செய்ய மெய்ப்பொருளைச்
செந்தமிழ் பயிலா மைந்தர் நன் குணரத்
தீங்கில தாகிய ஆங்கில மொழியில்
பெயர்த்தினி தளித்துப் பேரிசை நிறுவினன்
அன்னபே ரறிஞன் யாரெனிற் கூறுதும்
ஆங்கில நாட்டுக்கு அணியென வுதித்து
அருந்தமிழ் அணங்கைத் திருந்திய செவிலித்
தாயென வளர்க்கும் நேயமிக் குடையோன்
கிறிஸ்துவ சமயக் குருத்துவ சீலன்
போப்பெனும் நாமம் புனைந்த நாவலனே."

என்று இவர் தம் உளமார, நாவாரப் போற்றிப் பாடும்பொழுது போப்பையர் உரையும் பாட்டும் உடையோர் சிலருள் ஒருவராவார் என்பது தெளிவாகின்றது.

மேலை நாட்டினின்று தமிழகம் போந்து தமிழ்த் தொண்டாற்றினர் பலர். அத் தொண்டுகளில் மிகச் சிறந்ததொன்று போப்பையர் தமிழ்த்தொண்டு. ஒருவர், தம் உணர்வில் தோன்றும் கருத்துக்களுக்குச் செய்யுள் வடிவம் தருதல் எளிது. ஆனல், பிறரொருவர் உணர்வில் தோன்றி, ஒரு மொழியில் வடிவம் பெற்ற கருத்துக்களுக்குப் பிறிதொரு மொழியில் வடிவம் தருதல் அரிது. கருத்தும் ஒலியும் இழைந்தால் தான் செய்யுள் எழ முடியும். சொற்களில் பொருள் விளங்காவிடினும், ஒலி நயம் உள்ளத்திற் பதிந்து உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்யும். செய்யுளை மொழி பெயர்ப்பதற்கு எத்தகைய அறிஞனும் முற்படுவதில்லை. ஆனல் போப்பையர் துணிந்து செய்தார். இன்று உலகம் அவரைப் பாராட்டுகின்றது.

மூலப் பொருளினின்று தம்மால் இயன்றவரை முரண்படாது ஆங்கில மொழி பெயர்ப்பு அமைய வேண்டுமென்னும் அவரது வேட்கையைக் காணவேண்டுமாயின்,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்னும் குறட்பாவை,

"If love and virtue in the household reign
This is of life the perfect grace and gain."

என்னும் மொழிபெயர்ப்போடு ஒப்பு நோக்குக.

" If speak you will speak words that fruit afford
If speak you will speak never fruitless word. "

என்னும் அவர் மொழிபெயர்ப்புச் செய்யுளடிகள்,

" சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். "

என்னும் வள்ளுவர் கருத்தைப் பிறழாது பிறமொழியினருக்கு எடுத்துக் காட்டுவது குறிப்பிடத் தக்கதாம்.

அவர் தம் எழுபத்தேழாம் அகவையில் திருவாசகத்தை மொழி பெயர்க்கத் தொடங்கினர் என்பது ஒரு வியக்கத்தகு செய்தி. ஒரு நாள் வெண்ணிலவு தன் தண் கதிர்களைப் போப்பையர் வீட்டு நிலாமுற்றத்தில பொழிந்து கொண்டிருந்தது. தமிழார்வம் அவர் கண்களிலே ஒளிவிட, தமிழறிவு அவர் சொற்களிலே தெளிந்தோட, தமிழ் நாட்டுத் தத்துவங்கள் அவர் நாவில் விளக்கம் பெற, அதனைக் கேட்டு மேலும் அறிய விழைந்த பாலியல் கல்லூரி முதல்வர், போப்பையரிடம் திருவாசகத்தை மொழி பெயர்க்குமாறு வேண்டுகோள் விடுத்தார். முதிர்ந்து தளர்ந்த மேனியுடைய போப்பையர், " என் விழைவும் அஃதேயாயினும் யான் சாகாவரம் பெற்றிலேனே " என்றார். தலைவர், ஓர் அரும்பணியைத் தொடங்கி ஆற்றுதலே நீண்ட காலம் வாழ்வதற்கு வழியென ஊக்கம் கொடுக்கவே, பணி தொடங்கிற்று தம்முடைய எண்பதாவது வெள்ளணி விழா நாளில், போப்பையர் தம் திருவாசக மொழி பெயர்ப்பை வெளியிட்டார். மேலும் எட்டாண்டுகள் வாழ்ந்தே இறைவனடி அடைந்தார். இச்செய்தியால்,

" புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப வென்பதம் செய்வினை முடித்தே "

என்னும் மேற் கூறிய புறநானூற்று அடிகள் இவரிடத்து மேலும் விளக்கம் பெறுவதைக் காண்கின்றோம். தாங்கள் எடுத்த செயலை நிறைவேற்றியே இறைவனடி சேர்வார் பெரியோர். இருபது நூற்றாண்டுகளுக்கு முன் புலவர் ஒருவர் தம் ஆற்றலினல் புகழுடையோர்க்கு வகுத்துத் தந்த இலக்கணத்திற்கு இலக்கியமாய்ப் போப்பையர் வாழ்வு திகழ்கின்றது.

நாலடியார், திருக்குறள், திருவாசகம், சிவஞானபோதம் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தம் புகழை நிறுவிச் சென்றார் போப்பையர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆண்டு தோறும் தமிழ்த் தேர்வில் முதல் மதிப்பெண் பெறுவோர்க்குப் போப் தங்கப் பதக்கத்தைப் பரிசளித்துப் போப்பையர் புகழை நிறுவுகின்றனர் தமிழ் மக்கள். சாயர்புரத்தில் நல்லதொரு கலைக் கோயிலை நிறுவி, அவர்தம் அழியாப்

புகழை எடுத்துக் காட்டுகின்றனர் சாயர்புரம் மக்கள். தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டு, தமிழர்தம் உள்ளத்தில் நிலையான இடம் பெற்ற போப்பையரின் முயற்சி, உழைப்பு, ஆர்வம் இவற்றை வருங்கால மக்களிடை வளர்ப்பதற்கு இக்கலைக் கோயில் ஒரு தனிக் கோயிலாக விளங்க வேண்டுமென்றால், அக்கல்லூரியில் பயிலும் மாணவர் ஒவ்வொருவரின் குறிக்கோளும் அதுவாக இருத்தல் வேண்டும்.

வெற்றிகொள் வாழ்வினைப் பொற்புடன் நடாத்திநல்
பெற்றிகொள் பெயரினைப் புவியினில் நிறுத்தினை
நற்றவப் புகழுடன் நலமிகு இறைபதம்
பொற்றாள் சேர்ந்தாய் வாழிநின் புகழே.

அந்நாளில் பெயரெச்சம், வினையெச்சம் முதலிய சிறு இலக்கணக் குறிப்புகளை உணர்தற்கும் நன்னூல், தொல்காப்பியம் முதலிய மலைகளை ஏறிக் கடத்தல் வேண்டும். எல்லாரும் அம்மலைகளை ஏறிக் கடத்தல் கூடுமோ? அஃதொரு பெருந் தொல்லையாகவே இருந்தது. அத்தொல்லையைப் போக்கிய முதல்வர் டாக்டர் போப் ஐயரே யாவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் டாக்டர் போப் ஐயரின் பெருமை தமிழ் நாட்டை விதானமிட்டது. அவர்தம் இலக்கண நூல் ஒவ்வொரு மாணாக்கர் கையிலும் பொலிவதாயிற்று. யான் முதன் முதல் பயின்ற இலக்கணம் டாக்டருடையதே.

— தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

ஒரு தமிழரின் கல்லறை.

மீ. ப. சோமசுந்தரம்,
(அனைத்திந்திய வானொலி நிலையம், சென்னை.)

பெப்ருவரி மாதத்தின் இரண்டாவது வாரத்திலே போப் அறிஞரின் நினைவுக்கு அஞ்சலி செய்வதில் ஒரு பொருத்தம் இருக்கிறது.* ஏனென்றால் அந்த அறிஞர் இவ்வுலகிலிருந்து மறைந்த தினம் பெப்ருவரி பதினோராந்தேதி!

திருக்குறளையும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததோடு, மேனாட்டு மக்களுக்குத் தமிழ் இலக்கியத்தின் சிறப்புக்களை யெல்லாம் அளவற்ற பக்தியோடு எடுத்துச் சொன்னவரும், தம்மை ஒரு தமிழன் என்று அழைத்துக் கொள்வதிலே பெருமை யடைந்தவருமான ஆங்கிலப் பெருமகனார் ரெவரெண்ட் ஜி. யு. போப் 1908-ஆம் ஆண்டில் பெப்ருவரி பதினோராந்தேதி ஆக்ஸ்போர்ட் நகரத்தில் மரணமடைந்தார். அவருடைய கல்லறையிலே அவரைத் "தென் இந்தியாவின் போப்" என்றே குறிப்பிட்டிருக்கிறார்கள்! இந்தக்கல்லறையைத் தேடித்தான் ஆக்ஸ்போர்டில் நான் பல இடங்களில் சுற்றியலைந்தேன்.

லண்டன் நகரத்தில் எனக்குத் தெரிந்த நண்பர்களிடமெல்லாம் விசாரித்துங் கூடப் போப் அறிஞரின் கல்லறை ஆக்ஸ்போர்டில் எங்கே இருக்கிறது என்று யாராலும் சொல்ல முடியவில்லை. இது எனக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது! ஆங்கில இலக்கிய ஆசிரியர்களின் திருநாமங்களை நினைவு நிலையங்களிலே அத்தனை கண்காணிப் போடு பாதுகாத்து வருகிற பிரிட்டிஷ் வட்டாரத்தில், வாழ்வு முழுதும் தமிழுக்காக உழைத்த ஓர் ஆங்கிலேயரைப் பற்றிச் சரியான குறிப்புக் கிடைக்காமற்போனது, ஏமாற்றத்தோடு துயரத்தையுமே தந்தது! என்றாலும் ஆக்ஸ்போர்ட் சென்று எப்படியும் விசாரித்துக் கண்டு பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை என் மனத்தில் பூரணமாக இருந்தது. ஏனென்றால் இந்த ஆங்கிலேய அறிஞர் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் தமிழ் தெலுங்கு ஆகிய மொழிகளின் ஆசிரியராகப் பணியாற்றியவர் 1888-ஆம் ஆண்டில் ஆக்ஸ்போர்டி லுள்ள பாலியல் கல்லூரியின் (Balliol College) மதகுருவாக நியமனம் பெற்றுப் பல்லாண்டுகள் தமிழ் மொழிக்கு அருந்தொண்டுகள் புரிந்தவர். 1906-ஆம் ஆண்டில் 'ராயல் ஏஷியாடிக் சொசைட்டி' இவருடைய தென்னிந்திய மொழி ஆராய்ச்சியை வியந்து தங்கப் பதக்கமும் பரிசளித்துப் பாராட்டியது. எனவே, ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் மிக எளிதில் தகவல் கிடைக்கும் என்று நம்பினேன். அதனால் தான் 'க்ரைஸ்ட் சர்ச்' பூங்காவில் அதிக நேரம் செலவழித்து விடாமல் அங்கிருந்து அவசரமாகக் கிளம்பினேன்.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்துக்குள்ளே சென்று நமது நாட்டு மொழிகளின் தலைவராக உள்ள பேராசிரியரைத் தொலைபேசிமூலம் கூப்பிட்டு விசாரித்தார் என் நண்பர்.

* 1961 பெப்ருவரி 12-ஆம் தேதி 'கல்கி' இதழில் இக்கட்டுரை வெளிவந்தது.

இவர் டெலிபோன் செய்த வேளையின் பிசகோ அல்லது தமிழ் செய்த ' கண்ணும்பூச்சி ' விளையாட்டோ அந்தப் பேராசிரியருக்குமே தகவல் தெரியவில்லை. !

" உங்களுக்கு நன்றாகத் தெரியுமா? போப்பின் கல்லறை ஆக்ஸ்போர்டிலேதான் இருக்கிறதா ? இருக்குமானால் இவருக்குத் தெரியாமல் இராதே! " என்றெல்லாம் என்னுடைய நண்பர் எனக்குக் குறுக்குக் கேள்விகள் போட்டார். பதில் பேசாமல், " லண்டனுக்குத் திரும்புவோம் ! " என்றேன் பெருத்த ஏமாற்றத்தோடு.

தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்த பிறகு, " ஆக்ஸ்போர்டு சென்றேன் ஆனால் போப்பின் கல்லறையைக் காணவில்லை " என்று தமிழன்பர்களிடம் எந்த முகத்தோடு சொல்லுவேன் என்று மெய்யாகவே வருந்தினேன்.

லண்டனுக்குத் திரும்பியதும் முதலாவது வேலையாகப் பீ. பீ ஸி. யின் நூல் நிலையத்திலேயுள்ள மொழி வரலாற்றுப் புத்தகங்களைப் புரட்டினேன். போப் அறிஞரின் திருக்குறள் மொழி பெயர்ப்பு அங்கேயிருந்தது. சில வரலாற்றுக் குறிப்புக்களும் அகப் பட்டன. என்றாலும் ஏற்கனவே நம்முடைய நாட்டில் படித்துள்ள செய்திகளுக்கு மேல் போப்பைப் பற்றிப் புதிதாக ஒன்றும் அகப்படவில்லை. ஆனால் போப்பின் கல்லறை ஆக்ஸ் போர்டிலே தான் இருக்கிறது என்ற மகத்தான உண்மை மட்டும் மீண்டும் அந்தப் புத்தகங்களிலே உறுதியாயிற்று.

சில வாரங்கள் கழித்து எனது ஸ்காட்லாந்து யாத்திரையின் போது " யார்க் " என்ற நகரத்திலேயுள்ள மிகப்பெரிய நகராண்மை நூல் நிலையத்துக்கு நான் சென்ற சமயம் மேற்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தினேன். நூல் நிலையத்தின் அதிபர் மிகவும் ஒத்தாசை செய்தார். பிரிட்டிஷ் " ஹூ இஸ் ஹூ " (who is who) என்ற ஒரு வரலாற்று நூலில் ஆங்கிலேயர்களிலே பெருஞ்சாதனைகள் புரிந்துள்ள பிரமுகர்களின் வரலாற்றுக் குறிப்புக்களை அச்சிட்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்புக்களைப் படித்துப் பார்த்ததில், போப் அறிஞரின் சமாதி ஆக்ஸ்போர்டில் " ஸெயிண்ட் ஸெபல்கர் ஸெமெட்டரி " என்ற கல்லறைக் கூடத்தில் இருக்கிறது என்று தெரிய வந்தது. இந்த கல்லறைக் கூடம் ' வால்ட்டன் தெரு ' என்ற ஒரு பழைய வீதியில் இருப்பதாகவும் தெரிந்து கொண்டேன்.

ஸ்காட்லாந்திலிருந்து லண்டன் திரும்பும் பாதையில் ஆக்ஸ்போர்ட் வழியாகவே வந்தேன். ஆனால், ஆக்ஸ்போர்ட் எல்லைக்குள் வந்தபோது எங்கள் மோட்டார் வண்டி ஒரு விபத்துக்குள்ளே சிக்கியதும், தெய்வீகமாக நாங்கள் தப்பித்து லண்டன் போய்ச் சேர்ந்ததும் ஒரு தனி அத்தியாயம்.

" முக்காலும் மூன்று முறை " என்று நம்முடைய நாட்டில் ஒரு பழமொழி உண்டல்லவா ! அப்படி மூன்றும் முறையாக ஆக்ஸ்போர்ட் சென்றபோது தான் கொலம்பசும், வாஸ்கோடகாமாவும் போல் நானும் என்னோடு வந்த கோபாலகிருஷ்ணன் என்ற நண்பரும் வெற்றிக் கொடி நாட்டினோம்.

ஆம் ; மூன்றும் முறை சென்றபோது, என் கையில் எல்லாத் தகவல்களும் இருந்தன. துணைக்கும் ஒரு தமிழ் இளைஞர் வந்து சேர்ந்தார். கோபாலகிருஷ்ணன்

என்று பெயர் மதுரைத் தியாகராசர் கல்லூரித் தலைவர் வரதாச்சாரியவர்களின் புதல்வர். க்ளாஸ்கோவில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்திலே மேற்படிப்புக்காகச் சென்றிருக்கிறார். இவர் திடீரென்று ஒரு நாள் லண்டனுக்கு வந்து சேர்ந்தார். அன்று விடுமுறை நாளாக இருந்ததால், இரண்டுபேருமாக ஆக்ஸ்போர்ட் புறப்பட்டோம்.

நாங்கள் ஆக்ஸ்போர்ட் போய்ச் சேரும்போது மத்தியானம் பன்னிரண்டு மணி. வால்ட்டன் தெருவை விசாரித்துக் கொண்டு சென்றோம். " ஸெய்ண்ட் ஸெபல்கர் ஸெமட்டரி"க்குப் போனால், அங்கே வாசல் அடைத்து இரண்டு கதவுகளும் பூட்டிக் கிடந்தன ! பெருத்த ஏமாற்றமாகப் போய்விடவே, எதிர்வரிசையிலே இருந்த ஒரு சிகரெட் கடைக்குப் போய்த் தகவல் கேட்டோம். அங்கே ஒரு கிழவி அம்மாள் உட்கார்ந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தாள். எங்களை ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்தாள் ! எங்கள் முகத்திலே இருந்த கவலைக் குறியைக் கண்டு மிகவும் பரிவோடு சொன்னாள். "நண்பரே உங்களுக்காக மிகவும் அநுதாபப் படுகிறேன். இப்பொழுது இந்தக் கல்லறைக் கூடத்தைப் பூட்டி விட்டார்கள். இங்கே நாலாயிரம் கல்லறைகள் இருக்கின்றன. பன்னிரண்டாயிரம் பேர்களை அடக்கம் செய்திருக்கிறார்கள். இனிமேல் நிச்சயம் இடம் கிடையாது என்று இந்தக் கூடத்தையே அடைத்து விட்டார்கள் ! "

இவ்வாறு அந்த அம்மாள் சொன்னதும் என்னுடைய கவலை எப்படியிருந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளுங்கள்.

" நண்பரே ! உங்களுடைய முன்னோர் ஒருவர் இங்கே அடக்கம் செய்யப் பட்டிருக்கிறார் என்பது உங்கள் கவலையிலிருந்து எனக்குப் புரிகிறது நீங்கள் ஒன்று செய்து பாருங்கள் ! கல்லறைகளின் பாதுகாவலர் முகப்பிலேயே குடியிருக்கிறார். போய் உங்கள் மூதாதையரின் சமாதிக்கு அஞ்சலி செலுத்த வந்திருப்பதாகச் சொல்லிப் பாருங்கள் ! " என்று கூறினார் அந்தக் கிழவி அம்மாள்.

" கட்டாயம் சொல்கிறேன். இங்கேயுள்ள கல்லறையில் அமர நித்திரை செய்கிறவர் என்னுடைய மூதாதையர்தான் ! என்னுடைய மூதாதையர் மட்டுமில்லை. தமிழன் ஒவ்வொருவனுக்கும், தென்னிந்தியன் ஒவ்வொருவனுக்குமே மூதாதையர் அவர். கட்டாயம் காவலாளியிடம் சொல்லுகிறேன் ! " என்று கூறிவிட்டுக் காவலாளியைப் போய்ப் பார்த்து, அவருடைய அனுமதியோடு உள்ளே சென்றோம் !

நாலாயிரம் கல்லறைகளில் போப்பின் கல்லறை எது என்று கண்டு பிடிப்பது எளிய காரியமா? மூடப்பட்ட கல்லறைக் கூடமானதால் பதிவுப் புத்தகமும் கல்லறைகளின் விவரப் பட்டியலும் அங்கேயில்லை ! நானும் கோபாலகிருஷ்ணனும் போப்பின் பெயர் தென்படுகிறதா என்று ஆளுக்கொரு மூலையிலே தேடினோம். அகப்படவில்லை !

மீண்டும் காவலாளியிடம் வந்து சொன்னோம். " இங்கே நாங்கள் தேடுகிற கல்லறை ஒரு தமிழ் ஆசிரியரின் கல்லறை. பாலியல் கல்லூரியிலே பணியாற்றியவர் அவர் ! நீங்கள் அதைக் கண்டு பிடித்துக் கொடுத்துவிட்டால் எங்கள் ஆனந்தத்தை

எப்படி வெளியிடுவோமோ, தெரியாது!'' என்றெல்லாம் கூறினேன். உடனே காவலாளியும் எங்களோடு வந்து தேடினர்.

எங்களுடைய திண்டாட்டத்தைப் பார்த்துப் போப் அறிஞரின் ஆத்மாவுக்கே இரக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் எங்கோ ஒரு புதருக்குள்ளேயிருந்து காவலாளி கூப்பாடு போட்டார். "பீ ஓ பீ இ'' (POPE) என்று! ஓடியே போய்ப் பார்த்தோம்! வாசலின் முகப்பிலேயே வலது புறத்திலே வளர்ந்து நின்ற ஒரு 'யூ' (YEW) மரத்தின் அடியில், செடியும் கொடியுமாகப் பின்னிப் படர்ந்து மறைத்துக் கொண்டிருந்த ஒரு பெரிய புதரின் கீழே, சலவைக் கல்லினால் ஆன கல்லறை இருந்தது. காவலாளி எங்களுக்காக அந்தப் புதரைச் சற்றுக் களைந்ததும், எழுத்துக்கள் மங்கலாகத் தெரிய ஆரம்பித்தன.

கோபாலகிருஷ்ணன் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்தார். கைக் குட்டைகளை அதில் நனைத்துக் கல்லறையிலே தேய்த்தோம். கீழே கண்ட வாக்கியங்கள் கல்லறையின் மேலே மிக நன்றாகத் தெரிந்தன.

"George Uglow Pope, D. D. of South India; Sometime lecturer in Tamil and Telugu in the University and chaplain of Balliol College, Oxford. Born 24th April 1820. Died 11th February 1908. This stone has been placed here by his family and by his Tamil friends in South India in loving admiration of his life long labours in the cause of Orient literature and philosophy.''

இந்த வார்த்தைகளைப் படித்ததும் எனக்கு உடம்பு புல்லரித்தது! இந்தக் கல்லை இங்கே நிறுவியது போப்பின் குடும்பத்தார் மட்டுமில்லை. **தென்னிந்தியாவிலுள்ள அவருடைய தமிழ் நண்பர்கள்** என்று எழுதியிருந்ததைத் திரும்பத் திரும்பப் படித்தேன். அவரை ஒரு தென்னிந்தியர் (of South India) என்றே அந்தக் கல்லறையில் குறிப்பிட்டிருப்பதும், இந்தக் கல்லறையைக் கட்டுவதிலே தமிழ் மக்களுடைய நன்கொடையும் சேர்ந்திருக்கிறது என்பதும் தமிழ் வரலாற்றில் மணிமணியாகச் செதுக்கி நிறுத்த வேண்டிய எழுத்துக்கள் அல்லவா? அந்த எழுத்துக்களின் மேலே தான் இப்பொழுது காட்டுக் கொடி படர்ந்திருக்கிறது.!

போப்பின் கல்லறைக்குப் பக்கத்திலே அவருடைய மனைவியின் கல்லறையும் இருக்கிறது. இந்த இரண்டு கல்லறைகளையும் நானும் கோபாலகிருஷ்ணனும் தமிழ் மக்களின் சார்பிலே தமிழ் முறைப்படி சுற்றி வந்து வணக்கம் செலுத்தினோம். இதைப் பார்த்ததும் காவலாளிக்கும் ஒரு புதிய பக்தி உண்டாகி விட்டது. அவரும் கிறிஸ்துவ முறையிலே கல்லறைக்கு மரியாதை செலுத்தினர்.!

"என் அப்பனே! இனிமேல் நீ இந்தக் கல்லறையிலே கொடி படரும்படி விடாதே. இது எங்கள் முன்னோர் ஒருவருடைய சமாதி இவருடைய பரம்பரையிலே வந்த மக்கள் ஆயிரம் ஆயிரமாகத் தென்னிந்தியாவிலே வாழ்கிறோம்! இனிமேல் யாராவது

இந்தப் பக்கமாக வந்தால், இந்தக் கல்லறையைக் கண்டு பிடிப்பதற்காக நாங்கள் பட்ட கஷ்டமெல்லாம் அவர்களுக்கும் ஏற்படக்கூடாது. அவ்வப்போது எண்ணெய் தடவி இந்த எழுத்துக்களைப் பளபளப்பாக வைத்துக் கொள். உனக்குப் புண்ணியம் உண்டு. எங்கள் நாட்டு மக்கள் உனக்கு நன்றி செலுத்துவார்கள்.!" என்று சொல்லி எங்கள் அன்பையும் காவலாளிக்கு வழங்கினோம்.

"நீங்கள் சொன்னபடியே செய்கிறேன். என்றாலும் இதைப் பூட்டி வைத்து விட்டதால் இனிமேல் இங்கே எனக்கு வேலையில்லை யென்று வேறு இடத்துக்கு என்னை மாற்றிவிடுவார்கள். ஆனபோதிலும், நீங்கள் சொன்னதை ஞாபகம் வைத்துக்கொள் கிறேன். இந்தப் பக்கமாக உங்கள் நாட்டிலிருந்து யார் வந்தாலும் என்னைப் பார்க்கச் சொல்லுங்கள் என் பெயர் வெஸ்ட் உட் (Westwood). மறந்து விடாமல் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.!" என்றார் காவலாளி.

போப்பின் பெயரை நினைவுப் புதரிலே வைத்துக் கொண்டிருக்கிற தமிழ்ப் பரம்பரை தனது பெயரை மறந்துவிடாது என்று நம்பிய அந்தக் காவலாளிக்கு ஏமாற்றம் கொடுக்க நான் விரும்பவில்லை என்னுடைய குறிப்புப் புத்தகத்தில் அவருடைய பெயரையும் எழுதிக் கொண்டு விடை பெற்றேன்.

இந்திய நாட்டின் சுவடிகளும் சரித்திரச் செல்வங்களும் (போப்பின் படம் உட்பட) கலைச் சான்றுகளும் நிரம்பியுள்ள 'இந்தியக் கல்வி நிலையம்' என்ற ஆக்ஸ்போர்ட் ஆராய்ச்சிக் கழகத்தின் முகப்பிலே ஒரு சமஸ்கிருதக் குறிப்பு இருக்கிறது அதில் அந்தக் கல்வி நிலையத்தின் நோக்கம் என்னவென்பதைப் பொறித்திருக்கிறார்கள். "இந்தியக் கலைகளிலும் இந்தியப் பண்பாட்டின் சிறப்பிலும் மேனாட்டார்களுக்கு ஆர்வம் ஏற்படும்படி செய்வதோடு, இந்தியர்களுமே இந்தியாவின் பெருமையை நன்றாக உணரும்படி செய்ய வேண்டும் என்பதே இந்தக் கல்விக் கழகத்தின் நோக்கம்!" என்று எழுதியிருக்கிறார்கள். அத்தகைய நோக்கம் நிறைவேறுவதற்கு முதலாவது திருப்பணியாகப் போப்பின் கல்லறை ஓர் இலக்கியக் கோவிலாக விளங்க வேண்டும் என்று எண்ணி லண்டன் திரும்பினேன்.

[சாகித்திய அகாடமி அண்மையில் ரூ. 5000/- பரிசளித்துப் பாராட்டிய 'அக்கரைச் சீமையில்' என்னும் சிறப்புவாய்ந்த நூலிலிருந்து மேற்காணும் கட்டுரையை எடுத்து வெளியிட அனுமதி வழங்கிய எழுத்தாளர் "சோமு" அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றி உரியதாகும். — ஆசிரியர் குழு.]

பதினைந்தாண்டுகளுக்குப் பின்...

P. க்ஷேத்திரபாண்டியன் பி. ஏ.,

1971-ஆம் வருஷம் ஜனவரி மாதம் ஓர் நாள். காலைக் கதிரவன் தன் பொன்னொளிக் கிரணங்களைப் பூமியின் மேல் பரப்பிச் சில மணி நேரங்கள் ஆகியிருக்கும். இரவெல்லாம் இருந்த குளிர் நீங்கி மெல்லிய காற்று சோலைப் பூக்களின் நறுமணத்தோடு அறைக்குள் வீசிக் கொண்டிருந்தது.

"சார் தபால்!" என்ற குரலுடன் தபாற்காரன் வாசலில் நின்றான். கடிதத்தை வாங்கிப் பிரித்தேன்; சாயர்புரம் போப் கல்லூரித் தலைவர் எழுதியிருந்தார்.

"இம்மாதம் 30-ஆம் நாள் நடைபெற விருக்கும் கல்லூரி ஆண்டு விழாவில் தாங்கள் கலந்துகொள்ள வேண்டும் என்பது எங்கள் அவா. தாங்கள் போப் நினைவு உயர்நிலைப் பள்ளியின் பழைய மாணவர் என்பதில் நாங்கள் பெருமைப் படுவதோடு, தாங்கள் அவசியம் இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறோம்" — இவ்வாறு கடிதத்தில் கண்டிருந்தது.

கடிதத்தின் வாசகத்தைப் படிக்கும் போதே பள்ளிக்கூடத்தில் செலவிட்ட இளமை நாள் நினைவுகள் மனத்தில் பளிச்சிட்டன! படித்த நாட்களை நினைத்துக் கொள்வதில் தான் எத்தனை ஆனந்தம்!

வாழ்வில் வெகு நாட்களை வெளியூரில் கழித்துவிட்ட நான் கல்லூரி அழைப்பை ஏற்றுக் கொண்டு பிறந்த ஊருக்குப் போய் வருவது என்று முடிவு செய்தேன். "பெற்ற தாயும், பிறந்த இடமும் சுவர்க்கத்தை விடச் சிறந்தவை அல்லவா?" சம்மதம் தெரிவித்துக் கடிதம் எழுதிக் கல்லூரித் தலைவருக்கு அனுப்பி வைத்தேன்.

ஜனவரி மாதம் 30-ம் தேதி கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏறி திருநெல்வேலி ஜங்ஷனை அடைந்தேன். அங்கு தயாராகக் காத்திருந்த 1970-ஆம் வருஷ "இந்தியா மேக்" புது மாடல் காரில் ஏறி, சாயர்புரத்துக்குக் கிளம்பினேன். நம் நாட்டில் கார் தொழில் மிகுந்த அபிவிருத்தி அடைந்திருந்தது. வண்டி ரோட்டில் ஓடுகிறதா அல்லது மிதக்கிறதா என்று நினைக்கும்படி அத்தனை சொகுசான அமைப்பு! மின்னல் வேகத்தில் பறந்து கொண்டிருந்தது கார்!

கல்லூரி விழா நிகழ்ச்சி மாலை 6-மணிக்கு. பொழுது சாய்வதற்குள் சாயர்புரம் டவுண் எல்லைக்கு வந்து விட்டேன். பிறந்த மண்ணின் காற்று மேலே பட்டதுமே மனம் இன்பத்தால் ஆனந்தக் கூத்தாடிற்று.!

என்ன ஆச்சரியம்! சாயர்புரம் நகர சபை எல்லைக்குள் வந்ததுமே பள பளக்கும் சிமெண்ட் ரோடு; ரஸ்தாவின் இரு பக்கமும் வானளாவிய கட்டிடங்கள்; பங்களாக்கள்;

இடையிடையே நந்தவனங்கள்; சிறுவர் விளையாட்டு மைதானங்கள். ஆரம்பித்த சில ஆண்டுகளுக்குள்ளாகவே சாயர்புரம் நகர சபையார் அரும் பெரும் சாதனைகள் ஆற்றியிருந்தார்கள். இந்த இனிமையான எண்ணங்கள் என் மனத்திலே அலைமோதிக் கொண்டிருக்கும் போதே கார் கல்லூரி வாயிலை அடைந்து விட்டது.

கல்லூரியின் தலைவாயில் தோற்றம் கவர்ச்சியாகவும் எடுப்பாகவும் இருந்தது. என் மனம் அந்த விநாடியில் 35 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த S (எஸ்) முகப்பு வாயிலை நினைவுக்குக் கொண்டு வந்தது. கால ஓட்டத்திலே எவ்வளவு பெரிய மாற்றம்! (எஸ் (S) வாயில் அமைப்பில் என்ன லாபம் என்றால் பகுத்தறிவுள்ள மனிதர் மட்டுமே அதில் நுழைந்து திரும்பி, போகவோ, வரவோ முடியும். ஆடு, மாடுகள் அதனுள் நுழைந்து போக முடியாது!)

கல்லூரி வாயில் முகப்பிலே "முதல்வனாய் இரு; அல்லது முதல்வனோடிரு!" என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது ஆ! அதுவே பள்ளிக்கூடத்தின் குறிக்கோள். அங்குப் பயிலும் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்ட பாடமும் அதுவே தான்.

சமுதாயத்தின் எந்தத் துறையில் நுழைந்தாலும் சரி! அந்தத் துறையிலே "நீ முதல்வனாய் இரு! இல்லாவிட்டால் முதல்வனோடு கூடவே அவனுக்கு அடுத்தபடியாக இரு!" என்பதுவே மாணவர்கள் அங்குக் கற்ற பாடம். "கூட்டத்தோடு போகாதே. கூட்டத்துக்கு முன்னால் போ! ஏன் என்றால் கூட்டத்தோடு போகிறவனை கூட்டம் ஒரு போதும் பின் தொடருவதில்லை!" இதுவே அந்தப் பள்ளி அறைகளில் முழங்கிய அறிவு முரசு! "பிறர் நிழலில் தங்காதே! பிறர்க்கு நிழல் கொடுப்பவனை இரு!" இந்த வாசகங்களே பள்ளியில் பயின்று வெளியேறிய மாணவர்களின் இதயங்களில் ஒலித்த பேரிசை கீதம்!

கல்லூரித் தலைவர் அறையின் முன் கார் வந்து நின்றது. காரை விட்டு இறங்கிய என்னைக் கல்லூரித் தலைவர் விரைந்து வந்து வரவேற்றார். வணக்கங்கள் பரிமாறிக் கொண்டோம். அவர் வரவேற்பு உரையாடலிலே எத்தனை பரிவு! எவ்வளவு அன்பு!

தலைவரின் அறைக்குச் சென்று அவர் எதிரில் நாற்காலியில் அமர்ந்தேன். தரை முழுவதும் சலவைக் கல் பரப்பி இருந்தது. உயரே மின்சார விசிறி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. மேஜையின் மேல் இரண்டு 'டெலிபோன்' கள் இருந்தன. ஒன்று வெளியாரோடு பேசுவதற்கு. மற்றொன்று உள்ளே வகுப்பு அறைகளில் இருக்கும் ஆசிரியர்களோடு பேசுவதற்கு. நல்ல முறையிலே அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

கல்லூரித் தலைவர் இளைஞராகவே காணப்பட்டார்.

"தங்களுக்கு இங்குள்ள ஆசிரியர்கள் யாரேனும் தெரியுமோ?" என்ற கேள்வியுடன் பேச்சை ஆரம்பித்தார்.

நான் படித்த நாட்களில் உள்ள ஆசிரியர்கள் அனைவருமே ஓய்வு பெற்றுப் போய் விட்டார்கள். "ஒன்று அல்லது இரண்டு பேர் இருப்பார்கள் என்று நம்புகிறேன். ஓவியர்

துரைசாமி அவர்கள் இருக்கிறார்களா ? திருவாளர் பிரின்ஸ் அவர்களையும் தெரியும் '' என்று பதில் சொன்னேன்.

உடனே டெலிபோனை எடுத்தார். ஓவிய ஆசிரியர் துரைசாமி போனில் அழைக்கப்பட்டார். நாங்கள் இருந்த இடத்தில் இருந்தே பேசிக்கொண்டோம்.

கல்லூரித் தலைவர் பேசினார், "மிஸ்டர் துரைசாமி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஓய்வு பெறவேண்டியவர். தேசப் படங்கள், டவுன் பிளான்கள், மற்றும் கல்லூரிக் கலைக் கூடத்துக்குத் தேவையான திரைகள் எழுத இரண்டு ஓவியர்களை நியமித்து, அவர்கள் வேலையை மேற்பார்வையிட இவர்களை வைத்திருக்கிறோம். ''

"யார் யாரை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை நன்கு தெரிந்து கொண்டிருக்கிறீர்கள் '' என்று நான் சொல்லிக்கொண்டேன்.

சிறிது நேரத்தில் திருவாளர் பிரின்ஸும், ஓவியர் துரைசாமி அவர்களும் வந்து சேர்ந்தார்கள். முற்றிலும் நரைத்த தலை. சுருக்கு விழுந்த முகங்களோடு காட்சியளித்தார்கள். நடையிலே தளர்ச்சி. என்ன விந்தை! காலம் என்னும் ஓவியன் மனித உருவங்களையே மாற்றி எழுதி விடுகிறான் !

"கல்லூரியைச் சுற்றிப் பார்க்கவேண்டாமா? '' என்ற கேள்வியுடன் கல்லூரித் தலைவர் என்னைக் கல்லூரியின் பல பாகங்களுக்கும் கூட்டிச் செல்ல ஆயத்தமானார். நாங்கள் கிளம்பினோம்.

கல்லூரித் தலைவர் அறையை அடுத்த ஒரு கூடத்திலே சுமார் 300-க்கு மேற்பட்ட சைக்கிள்கள் வைக்கப்பட்டு, காவற்காரன் நின்றுகொண்டிருந்தான். கல்லூரியில் பயிலும் மாணவர்களின் வண்டிகள், விழாவுக்காக வந்திருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டேன்.

ஒரு கட்டிடத்தைச் சுட்டிக் காட்டி "இங்குதான் பி. ஏ. வகுப்புகள் நடத்துகிறோம் '' என்று கல்லூரித் தலைவர் கூறினார்.

என் சிந்தனை பின் நோக்கிச் சிறகடித்துப் பறந்தது.

"முன்னால் இந்த இடத்தில் வெளிப் பிரமுகர்கள், கல்வி அதிகாரிகள் வந்தால் தங்கும் பங்களா இருந்தது அல்லவா? '' என்று கேட்டேன்.

"ஆம். நீங்கள் கூறுவது சரிதான். அந்தக் கட்டிடத்தை முற்றிலும் புதுப்பித்து விட்டோம். மேல் மாடியும் அமைத்து பி. ஏ. வகுப்பு நடத்துகிறோம். ''

"நான் இங்குப் படித்துப் போனபின்பு எவ்வளவு மாறுதல்கள் நடந்திருக்கின்றன '' ஆச்சரியத்தோடு சொல்லிக்கொண்டேன் நான்.

"இதோ இருக்கிறதே, இதுதான் காமராஜர் ஹால். 'பிரி-யுனிவர்ஸிட்டி வகுப்பு' நடத்துகிறோம் '' என்றார். சேனைகளின் மத்தியிலே நிமிர்ந்து நிற்கும் தளபதி

போல், மற்றக் கட்டிடங்களுக்கு மத்தியில் மிகவும் எடுப்பாகக் காட்சி அளித்தது காமராஜர் ஹால்! கல்லூரி முதல் வகுப்பு நடத்த, போதிய இடவசதியும் அதில் இருந்தது!

அடுத்து நின்ற மற்றொரு அழகிய கட்டிடத்தைச் சுட்டிக் காட்டி "இது சென்ட்ரல் ஹால். இங்குதான் நாங்கள் மாணவர்கள் சட்டசபைக் கூட்டம் நடத்துவது. வெளியார் வந்து சொற்பொழிவு வழங்கும் இடமும் இதுவே" என்று சொன்னார்.

மேலும் நடந்தோம். உயர்நிலைப் பள்ளிப் பகுதிக்கு வந்தோம்.

"இது உங்களுக்குத் தெரியும். பழைய மாணவர்கள் உதவிய நூற்றாண்டு மண்டபம். இங்கு ஹைஸ்கூல் எஸ். எஸ். எல். சி. வகுப்பு நடைபெறுகிறது" என்று கூறினார்.

அந்தக் கட்டிடத்துக்குள் நாங்கள் வந்ததும் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் தமது ஆபீஸ் அறையிலிருந்து வெளி வந்தார். அவரும் எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். சிறிது நேரம் பேசிக்கொண்டோம்.

"வாருங்கள் நமது நூல் நிலையத்தைப் பார்வையிடலாம்." என்று அழைத்துச் சென்றார்.

பெரிய சலவைக்கல் மாளிகை! "இதுதானே நூல் நிலையம்! மிகப் பிரமாதமான அமைப்பு!" என்று பாராட்டினேன்.

உள்ளே போனோம். மிகவும் அழகான முறையில் புத்தகங்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. உயர்ந்த அலமாரிகளில் உள்ள நூல்களை எளிதில் எடுக்க வசதியும் இருந்தது.

பின்னர் ஒரு கதவைத் திறந்து ஏணிப்படிகள் வழியே கீழே இறக்கி நடத்திச் சென்றார். எனக்கு ஏற்பட்ட ஆச்சரியத்துக்கு அளவே இல்லை.

"என்ன! பூமிக்குள்ளேயும் நூல் நிலையமா?" நான் கேட்டேன். இதற்குள் பழைய நினைவுகள் வரவே, "இதுதானே தெப்பக்குளம் இருந்த இடம்" என்று கேட்டேன்.

